ApplicationFileNo : [illegible]

## கடன் ஒப்புதல் கடிதம்

அன்பார்ந்த வாடிக்கையாளரே/உறுப்பினரே,

கடன் வேண்டி தாங்கள் சமர்பித்த விண்ணப்பம் தொடர்பாக, கீழ்காணும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, கீழ்காணும் விவரங்களைக் கொண்ட தங்களுடைய விண்ணபத்திற்கு ஒப்புதல் அளிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

1. கடனானது நிலையான வட்டி விகிதத்தின் கீழ் வழங்கப்படும். மேலும், தவணைக்காலம் முடியும் வரையில் அல்லது கடன் தொகையைத் திரும்பச் செலுத்தும் வரையில், இவற்றில் எது நீண்ட காலமோ அதன் வரை, நிலையான வட்டி விகிதம் மாற்றத்துக்கு உட்பட்டதல்ல.
2. கிரெடிட் ஷீல்டு இன்சூரன்ஸ் உள்ளிட்ட செயலாக்கக் கட்டணம், இன்சூரன்ஸ் பிரீமியம் ஆகியவை, கடன் வழங்கும்போது கடன் தொகையிலிருந்து கழித்துக்கொள்ளப்படும்.
3. விண்ணப்பிக்கும் போது நீங்கள் குறிப்பிட்டுள்ள வங்கிக் கணக்கில் கடன் தொகை கிரெடிட் செய்யப்படும். வங்கியிலிருந்து உங்கள் கணக்கிற்கு பரிவர்த்தனை செய்ததற்கான அத்தாட்சியானது ஒரு செல்லத்தக்க ஆவணமாக வழங்கப்படும்.
4. குறைந்தபட்சம் 50% கடன் தொகையாவது விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்காகப் பயன்படுத்த வேண்டும். இந்த நிபந்தனையில் ஏதேனும் விதிமீறல் இருந்தால், தங்களுக்கு வழங்கப்பட்ட முழு கடனுக்கான அனுமதியை ரத்து செய்து திரும்ப பெறுவதற்கு வங்கிக்கு முழு உரிமை உண்டு.
5. இந்தக் கடனுக்குத் தனியாக அபராத வட்டி அல்லது முன்கூட்டியே கடன் அடைப்பதற்கான கட்டணம் என எதுவும் இல்லை.
6. இந்தக் கடனுக்காகப் பிணையம் எதுவும் தேவையில்லை.
7. இது ஒரு கூட்டு பொறுப்புடைய குழு கடன் ஆகும், மற்ற உறுப்பினர்கள் கடனைச் செலுத்த தவறும்போது, அக்கடனைச் செலுத்துவதற்கு நீங்களும் கூட்டாக பொறுப்பாவீர்கள்.
8. அட்டவணையின்படி நீங்கள் வங்கியின் மையக் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும்.
9. வங்கி மையங்களில் நடக்கும் மையக் கூட்டத்தின் போது மட்டுமே தவணைத் தொகையைச் செலுத்தலாம். பேமெண்ட் செலுத்தும் போது கடன் பாஸ்புக்கைச் சமர்ப்பிக்க வேண்டும். மையத்தில் வைக்கப்பட்டிருக்கும் பேமெண்ட் ரசீது பதிவேடு மற்றும்/அல்லது மையத்தில் உங்கள் வங்கி அதிகாரி கடன் பாஸ்புக்கில் அளித்த ஒப்புதலே நீங்கள் பேமெண்ட் செலுத்தியதற்கான செல்லத்தக்க ஆவணமாகும்.
10. கடனை முன்கூட்டியே செலுத்த விருப்பினால் அல்லது கடனை அடைக்க விரும்பினால், வங்கியின் அதிகாரப்பூர்வ செல்லத்தக்க ரசீது மூலம், வங்கிக் கிளையில் மட்டுமே திருப்பிச் செலுத்த உங்களுக்கு அனுமதியுள்ளது. வங்கியின் சரியான அதிகாரப்பூர்வ ரசீது இல்லாமல் செலுத்தப்படும் தொகையானது, கடன்தொகை திருப்பிச் செலுத்தப்படுவதாக கருதப்படாது. வங்கிக் கிளைக்கு அப்பாற்பட்டும், சரியான அதிகாரப்பூர்வ ரசீது இல்லாமல் மேற்கொள்ளப்படும் பேமெண்டுகளுக்கு வங்கி பொறுப்பாகாது.
11. வங்கி அதன் விருப்பப்படி, ஏதாவது காரணத்திற்காக அல்லது எந்தக் காரணமும் இன்றி அதன் கடன் ஒப்புதலைத் திரும்பப்பெறலாம்.
12. கடன் வழங்குவது குறித்த முடிவானது வங்கியின் தனிப்பட்ட விருப்பத்திற்கு உட்பட்டதாகும்.
13. இந்த ஒப்புதல், மேற்கண்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்கு செல்லுபடியாகும், மேலும், வங்கியால் அதன் சொந்த விருப்பப்படி, உங்கள் குறிப்பிட்ட கோரிக்கையின் பேரில் செல்லுபடி காலத்தை நீட்டிக்கலாம்.
14. நீங்கள் மேற்கொண்ட கையொப்பம் அல்லது விரல்ரேகையானது டிஜிட்டல் மயமாகப்படும், மேலும், எந்தவொரு அதிகாரி அல்லது ஏஜென்சி, படிவம் 60, ஃபாட்கா பிரகடனம் போன்ற அவ்வபோது மாறுதலுக்கு உட்படும் பெயர் சான்று அறிவிப்புக்கு இணங்க இந்த டிஜிட்டல் மயமாக்கப்பட்ட கையொப்பம்/விரல்ரேகை பயன்படுத்தப்படலாம்.

தேதி: 20-04-2022

BM/ABM Signature



Equitas Small Finance Bank Limited
No.769, Spencer Plaza, 4th Floor, Phase II, Anna Salai, Chennai-600 002 Tel:044-42995000, Fax: 044 42995050
Toll Free:1800 3000 3030 CIN No.U65191TN1993PLC025280

Equitas Small Finance Bank

ApplicationFileNo : .

வங்கியில் கடன் பெறுவதற்கான எனது/ எங்களது தனிப்பட்ட விண்ணப்பத்தை/ங்களைச் சார்ந்து, ஈக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனுமதி விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் ஏற்கிறேன்/கிறோம்.

| | |
|---|---|
| மையத்தின் பெயர் & ஐடி | கிளையின் பெயர் & ஐடி |
| உறுப்பினர் பெயர் & ஐடி | |
| | |



Equitas Small Finance Bank Limited
No.769, Spencer Plaza, 4th Floor, Phase II, Anna Salai, Chennai-600 002 Tel:044-42995000, Fax: 044 42995050
Toll Free:1800 3000 3030 CIN No.U65191TN1993PLC025280

ApplicationFileNo : [illegible]

## கடன் ஒப்பந்தம்

| கிளை ஐடி | மைய ஐடி |
|---|---|
| கிளையின் பெயர் | மையத்தின் பெயர் |

| வரிசை எண் | உறுப்பினர் பெயர் | உறுப்பினர் ஐடி | கடன் வகை | கடன் தொகை (ரூபாயில்) | வட்டி விகிதம் ( % ) | தவணைத் தொகை ( ரூபாயில் ) | கடன் சுழற்சி | திரும்பி செலுத்துவதற்கான காலஅளவு | காலம் | செயல்முறைக் கட்டணம் % & தொகை ( ரூபாயில் ) | கிரெடிட் ஷீல்ட் இன்சூரன்ஸ் பிரீமியம் (ரூபாயில்) | தேர்ந்தெடுத்த பிற இன்சூரன்ஸ் ( ரூபாயில் ) | பழைய லோன் OS ஏதேனும் இருந்தால் பிடிக்கப் பட்டது | நிகர பட்டுவாடா தொகை ( ரூபாயில் ) | பட்டுவாடா தேதி | முதல் சேகரிப்பு தேதி / நாள் / நேரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | |



Equitas Small Finance Bank Limited
No.769, Spencer Plaza, 4th Floor, Phase II, Anna Salai, Chennai-600 002 Tel:044-42995000, Fax: 044 42995050
Toll Free:1800 3000 3030 CIN No.U65191TN1993PLC025280

- உங்களுடைய வங்கியில் கடன் பெறுவதற்கான எனது/ எங்களது தனிப்பட்ட விண்ணப்பத்தை/ங்கள் சார்ந்து, ஈக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின், மேலே உள்ள அனுமதி விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் கீழே உள்ள நிபந்தனைகளையும் ஏற்கிறேன்/கிறோம்:
- நான்/ நாங்கள் வேறு இடத்திற்கு மாறுவதாக இருந்தால், அந்த இடத்திற்கு மாறுவதற்கு முன் கடன் கணக்கைச் செலுத்தி முடித்துவிடுவேன்/வோம்.
- இந்தக் கடன் கூட்டு பொறுப்பு குழு கடன் என்பதால், ஒருவேளை ஏதேனும் குழு உறுப்பினரால் அவரது தவணையைச் செலுத்த முடியாத சூழ்நிலையில், அக்குழுவில் உள்ள உறுப்பினர்களில் நான் உட்பட, நானோ/வேறு ஏதேனும் ஒரு உறுப்பினரோ அவரின் சார்பாக அத்தவனையைச் செலுத்த ஒப்புக்கொள்கிறோம். இந்த ஏற்பாட்டின் கீழ் குழுவில் வேறு எந்த உறுப்பினருக்கும் நானோ மற்ற உறுப்பினர்களோ செலுத்தும் பணத்திற்கு வங்கி பொறுப்பேற்கவோ அல்லது பொறுப்பாகவோ இருக்காது
- கடன் அனுமதி என்பது நான்/ நாங்கள் வழங்கும் தகவல்களின் அடிப்படையிலானது என்பதை நான்/ நாங்கள் புரிந்துகொள்கிறேன்/றோம், மேலும் வங்கிக்கு நான்/ நாங்கள் சரியான தகவல்களை வழங்கியுள்ளேன்/ளோம் என்பதையும் உறுதியளிக்கிறேன்/றோம். எனது/எங்கள் பெயர் எந்தவொரு கடன் வழங்குநரின் செலுத்தத் தவறியவர்களுக்கான பட்டியலில் இல்லை அல்லது கிரெடிட் பணியக அறிக்கைகளின் கீழ் பிரதிபலிக்கவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்/றோம்.
- நான்/நாங்கள், கிரிடிட் நிறுவனங்கள், கட்டுப்பாட்டாளர்கள், சட்டரீதியான அமைப்புகள் போன்றவற்றுடன் எனது/எங்களது தகவல்களைப் பகிர்ந்து கொள்ள வங்கியை அங்கீகரிக்கிறோம், மேலும் நான்/நாங்கள், எங்களது கடன் மற்றும் அதனுடன் தொடர்புடைய இன்சூரன்ஸ் பாலிசியையும் வங்கியால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேறு எந்த ஏஜென்சிகளுக்கும்/நிறுவனங்களுக்கும் விற்க/மாற்ற/ஒதுக்க வங்கியை அங்கீகரிக்கிறோம்.
- நான்/நாங்கள், கிரெடிட் ஷீல்டு இன்சூரன்ஸ் பாதுகாப்பிற்கான என்னுடைய/எங்களுடைய ஒப்புதலை வழங்குகிறோம், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு உடன்படும் நபரைப் பொறுத்து, வங்கியில் இருந்து பெறப்பட்ட கடனின் அளவிற்கும், மேலும் இன்சூரன்ஸ் பாலிசியை வங்கிக்கு சாதகமான உரிமையாக்கவும் அங்கீகரித்து ஒப்புக்கொள்கிறோம். இன்சூரன்ஸ் மற்றும் இன்சூரன்ஸால் பாதுகாக்கப்படும் கடன்தொகை உள்ளிட்ட விவரங்கள், உள்ளடக்கங்கள் வங்கியால் எனக்கு/எங்களுக்கு விளக்கப்பட்டது, அதற்கும் நான்/நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.
- நான்/நாங்கள், கிரெடிட் ஷீல்ட் இன்சூரன்ஸை வங்கியின் விருப்பப்படி, வங்கியால் தேர்ந்தெடுக்கப்பட்ட இன்சூரன்ஸ் நிறுவனத்திடமிருந்து பெற, அதற்கு எதிரான எவ்வித பொறுப்பும் மாற்றுக் கருத்தும் இன்றி ஒப்புக்கொள்கிறோம்.
- கிரெடிட் ஷீல்ட் இன்சூரன்ஸ் பாலிசியின் கீழ் உள்ள காப்பீட்டாளர் மரணம் அடைய நேர்ந்தால், இன்சூரன்ஸ் நிறுவனத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள உரிமைகோரல் தொகையிலிருந்து நிலுவையில் உள்ள தொகையைச் சரிசெய்து கொள்ளவும், மீதமுள்ள இருப்புத் தொகை ஏதேனும் இருந்தால், கிரிடிட் ஷீல்ட் இன்சூரன்ஸ் பாலிசி/விண்ணப்பத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நாமினிக்குச் செலுத்தப்படும்.
- நான்/நாங்கள் தானாக முன்வந்து, எனது/எங்களது ஆதார் விவரங்களை, வங்கியிலிருந்து கடன் வசதியைப் பெற/ஒரு கணக்கைத் துவங்க வழங்கியுள்ளோம். நான்/நாங்கள், பயோமெட்ரிக் அங்கீகாரம், ஓடிபி அல்லது இ-கேஒய்சி செயல்முறை மூலம் யூஐடிஏஐ-இல் இருந்து எனது/எங்களது தகவல்களைப் பெற நான்/நாங்கள் வங்கியை அங்கீகரித்திருக்கிறோம். நான்/நாங்கள் இதன்மூலம் எனது/எங்களது தனிப்பட்ட தகவல்களை வங்கியுடன் பகிர்ந்து கொள்ள யூஐடிஏஐ-யை அங்கீகரிக்கிறோம்.
- ஒருவேளை எனக்கு/எங்களுக்கு, அடிஷனல் இன்கம் ஜெனெரேட்டிங் லோன் (ஏஐஜிஎல்) கிடைத்தால், நான்/நாங்கள் முன்னர் பெற ஐஜிஎல்லின் அதே நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் என்பதை நான்/நாங்கள் இதன்மூலம் உறுதிப்படுத்துகிறோம். நான்/நாங்கள், நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறேன்/இருக்கிறோம் மேலும் எனது முதன்மை லோனில் (ஐஜிஎல்) அறிவிக்கப்பட்ட நாமினியே இப்போதும் தொடர நான்/நாங்கள் அங்கீகரிக்கிறோம்"
- நான்/நாங்கள், **ஹாஸ்பிடல் டெய்லி கேஷ் (எச்டிசி)** பாலிசியை **உங்கள் மூலம் பெற விரும்புகிறோம் மற்றும் டிஜிட்டல் செய்யப்பட்ட** விண்ணப்ப படிவத்தின் மூலம் எனது/எங்களது ஒப்புதலை வழங்கியுள்ளோம். மேலும், நான்/நாங்கள், கடன் தொகையிலிருந்து பிரீமியத்தைக் கழித்து கொள்ளவும், விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக் கணக்கு எண்ணுக்கு மீதமுள்ள இருப்புத் தொகையைப் பரிவர்த்தனை செய்யவும் வங்கியை அங்கீகரிக்கிறோம்.
- நான்/நாங்கள், பர்சனல் ஆக்ஸிடண்ட் கவர்/தனிப்பட்ட விபத்து பாதுகாப்பை (பிஏசி) உங்கள் மூலம் பெற விரும்புகிறோம் மற்றும் டிஜிட்டல் செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தின் மூலம் எனது/எங்களது ஒப்புதலை வழங்கியுள்ளோம். நான்/நாங்கள், கடன் தொகையிலிருந்து பிரீமியத்தைக் கழித்து கொள்ளவும், விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக் கணக்கு எண்ணுக்கு மீதமுள்ள இருப்புத் தொகையைப் பரிவர்த்தனை செய்யவும் வங்கியை அங்கீகரிக்கிறோம்.
- எனக்கு/எங்களுக்கு அனைத்து தகவல்களும் விளக்கப்பட்டது மற்றும் நான்/நாங்கள் நிபந்தனைகளைப் புரிந்து கொண்டோம், அவ்வப்போது பொருந்தக்கூடிய பெயர் அறிவித்தல், படிவம் 60, எஃப்ஏடிசிஏ (FATCA), உறுப்பினர் தகவல் படிவம் போன்ற படிவங்களிலும், ஆர்டி, ஹோஸ்பி-கேஷ், பிஏசி போன்ற தயாரிப்புகளுக்கான விண்ணப்ப படிவங்கள் போன்றவற்றின் டிஜிட்டல் விண்ணப்பப் படிவங்களிலும் பதிவிட்ட எனது/எங்களது கையொப்பம் அல்லது கட்டைவிரல் பதிவை வங்கி பயன்படுத்த இதன்மூலம் ஒப்புக்கொள்கிறேன். அத்தகைய நிகழ்வில், அத்தகைய டிஜிட்டல் படிவங்கள் நான் / எங்களால் முதலில் செயல்படுத்தப்பட்டதாகக் கருதப்படும், அதேபோல் நான் / நாங்கள் எந்த முறையீடும் செய்யமாட்டோம் என இதன்மூலம் ஒப்புக்கொள்கிறேன்.
- பொருந்தக்கூடிய மற்றும் வங்கியில் இருக்கும் கடைசியாக புதுப்பிக்கப்பட்ட முகவரி, மொபைல் எண் அல்லது மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி கடன்கள், சலுகைகள் அல்லது வங்கியில் கிடைக்கக்கூடிய தயாரிப்புகள் தொடர்பான வேறு ஏதேனும் தகவல்தொடர்பு தொடர்பான முக்கியமான தகவல்களைத் தபால் மூலமாக, நேரில், எஸ்எம்எஸ் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம். "ரெஜிஸ்ட்ரியை அழைக்க வேண்டாம்" என்பதன் கீழ் நான் / எங்களால் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், இந்த அங்கீகாரம் செல்லும்.

கடனின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் எனக்கு/எங்களுக்கு விளக்கப்பட்டுள்ளன மற்றும் அவற்றை முழுமையாக புரிந்துகொண்ட பிறகு நான்/நாங்கள் எனது/எங்கள் கையொப்பம்/கட்டைவிரல் ரேகையைப் பதித்துள்ளோம். கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வட்டி விகிதத்துடன் செலுத்த வேண்டிய கடனைப் பெற நான்/நாங்கள் ஒப்புக்கொள்கிறோம், இதன்மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகை, செலுத்தப்படாத நிலுவைத் தொகையைக் குறிப்பிடப்பட்ட ஆண்டு வட்டி விகிதத்துடன் ஈக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அல்லது அதன் பிரதிநிதிகளுக்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் செலுத்துவோம் என்று உறுதியளிக்கிறோம். செலுத்தப்படாத முழு முதன்மை கடன்தொகை; மற்றும் எந்தவொரு திரட்டப்பட்ட வட்டியும் அதன் வழங்குநரின் கோரிக்கையின் பேரில் முழுமையாகவும் உடனடியாகவும் செலுத்தப்படும்.



Equitas Small Finance Bank Limited
No.769, Spencer Plaza, 4th Floor, Phase II, Anna Salai, Chennai-600 002 Tel:044-42995000, Fax: 044 42995050
Toll Free:1800 3000 3030 CIN No.U65191TN1993PLC025280

Equitas Small Finance Bank

ApplicationFileNo :

| வாடிக்கையாளர் பெயர் | தந்தை / கணவன் அல்லது மனைவியின் பெயர் | கடன் தொகை (எண் & எழுத்துகளில்) | வட்டி விகிதம் ( % ) | கணக்கு எண் & ஐஎஃப்எஸ்சி குறியீடு | வங்கி & கிளை | கடனின் இறுதி பயன்பாடு | நிலம் உரிமையாளர் விவரங்கள் | ரெவின்யூ ஸ்டாம்பில் வாடிக்கையாளரின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |



Equitas Small Finance Bank Limited
No.769, Spencer Plaza, 4th Floor, Phase II, Anna Salai, Chennai-600 002 Tel:044-42995000, Fax: 044 42995050
Toll Free:1800 3000 3030 CIN No.U65191TN1993PLC025280